**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்  25-ஆம் நாள்,**
**CC. 152 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 25.02.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தில்லைநாயகம் | வயது | : | 50 |
| த.பெ | : | திரு. கலியபெருமாள் | நிலை | : | **PW-6 (LW-14)** |

**A1 to A4 are called absent. Defence counsel filed petition u/s. 317 of Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை  -**

1) நான் தற்போது சிதம்பரம் தில்லையம்மன் கோயில் தெருவில் வசிக்கிறேன். கடைவைத்து நடத்தி வருகிறேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அ.சா.1 விஜயரங்கனும் அவரது மனைவி மஞ்சுளா என்பவரும் 2011-ஆம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை பாண்டிச்சேரியிலிருந்து  சிதம்பரம் நோக்கி இரு சக்கர வாகனத்தில் வந்தபோது மாலை சுமார் 6 மணிக்கு  லேசாக இருட்டான நேரத்தில் ஆலப்பாக்கம் ரயில்வேகேட் அருகே குழந்தையுடன் வந்தவர்களை இரு சக்கர வாகனத்தில் வந்த இருவரில் ஒருவர் மஞ்சுளாவின் தாலி செயினை பிடித்து இழுத்தபோது குழந்தையுடன் நடுரோட்டில் உயிருக்கு ஆபத்தான நிலையில் ரோட்டில் விழுந்துவிட்டார். மேற்படி  சம்பவம் குறித்து தகவல்  அறிந்து புதுச்த்திரம் காவல் நிலையத்திற்கு  சென்றேன்.

2) அப்போது குழந்தையும், தாயும் சிகிச்சை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்தில் இருந்தார்கள். சம்பவ நடந்த இடத்திற்கு தங்களை அழைத்து சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக பார்வை மகஜரில் நானும் மணிவண்ணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்ததுப்பற்றி தற்போது எனக்கு ஞாபகமில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் காவல் நிலையத்திற்கு சம்பவம் நடந்த அன்று வந்தேன். அ.சா.ஆ.8-ல் உள்ள கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.8-ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, கையொப்பம் போடும்போது படித்து பார்த்து போட்டேன் தற்போது ஞாபகமில்லை. அ.சா.1 விஜயரங்கன் எனது தங்கை கணவர். அ.சா.2 மஞ்சுளா எனது உடன்பிறந்த தங்கை. இந்த வழக்கில் என் தங்கைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**